# தமிழக அரசின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த கையேடு

# Manual of Social Security Scheme in Tamil Nadu

# சமூக பாதுகாப்புத் திட்டங்கள்

## அரசாணை எண்.26 ,சமூக நலம் மற்றும் சத்தணவு திட்டம்(ச.ந.6(1) துறை)
## நாள்:17.04.2015

## இத்திட்டங்களின் கீழ் உதவித்தொகை பெற தகுதி நிபந்தனைகள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தகுதி நிபந்தனைகள (மேற்கண்ட அரசாணையின் படி) |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம்<br><br>(தமிழக அரசால் கடந்த 01.04.1962 முதல் முதியோர் ஓய்வூதியம் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது- அரசாணை (பல்வகை) எண் 73. நிதி(ஓய்வூதியம் துறை நாள்: 22.01.1962<br><br>(இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம் கடந்த 19.11.2007 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.) | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்<br><br>➢ 60 வயது அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br><br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும் |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசிய திட்டம் அரசாணை (பல்வகை) எண் 87. சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்ட துறை நாள்: 31.03.2010. | ➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்<br><br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br><br>➢ ஊனம் நிலை 80% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்<br><br>இரு செவிகளும் முழுமையாக கேட்கும் திறனற்ற நபர்களும் இத்திட்டத்தில் பயனாளிகள் ஆவார்கள் (அரசாணை (பல்வகை) எண் 64. சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்ட துறை நாள்: 19.03.2010. |

| | | |
|---|---|---|
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும<br>➢ வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்<br>➢ 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br>➢ விதவையாக இருத்தல் வேண்டும் |
| 4. | மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் (01.11.1974 முதல்) அரசாணை (பல் வகை)எண் 1402 நிதி துறை நாள்:06.11.1974. | ➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும் (அரசாணை எண். 121 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்(ச.ந.6(1) துறை, நாள்:21.12.2011-ன் படி 45 வயதிலிருந்து 18 வயதாக குறைக்கப்பட்டுள்ளது.)<br>➢ ஊனம் நிலை 60% மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும் (உடல் ஊனத்தின் தன்மை குறித்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழே இறுதி அத்தாட்சியாக கருத வேண்டும்.)<br>➢ பேச்சுத்திறனற்ற பயனாளிகள் அரசாணை (நிலை) எண்.64, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் (ச.ந.6(1))துறை, நாள்:19.03.2010-ன் படி 01.04.2010 முதல் இத்திட்டத்தில் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்.<br>➢ அரசாணை எண்.27, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் (ச.ந.6(1))துறை, நாள்:22.02.2016-ன் படி ஊனம் நிலை 60% லிருந்து 40% ஆக குறைக்கப்பட்டுள்ளது. **ஆதரவற்றோர்** என்பது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகள் 40% மற்றும் அதற்கு மேல் ஊனம் நிலை இருப்பின் உதவித்தொகை பெற தகுதியுண்டு. |

| | | |
|---|---|---|
| | | ➢ அரசாணை எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் (ச.ந.6(1))துறை, நாள்:28.05.2018-ன் படி அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்கள்(கல்வி நிறுவனங்கள் உட்பட) பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை பெற தகுதியில்லை. தனியார் துறையில் நிரந்தர பணயில் அமர்த்தப்பட்டு ஆண்டு வருமானம் ரூ.3,00,000/-க்கு மேல் இருந்தாலும் உதவித்தொகை பெற தகுதியில்லை.<br><br>ஆண்டுவருமானம் ரூ.3,00,000/-க்கு மேல் பெறும் சுயதொழில் புரிவோருக்கும் உதவித்தொகை பெற தகுதியில்லை. |
| 5. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் (01.06.1975 முதல்) | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br><br>➢ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br><br>➢ விதவையாக இருத்தல் வேண்டும் |
| 6. | ஆதரவற்ற/கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் (25.04.1986 முதல்) | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்<br><br>➢ 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br><br>➢ சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 7. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வுதியத்திட்டம் (01.07.2008 முதல்) | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும.<br><br>➢ 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br><br>➢ திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| 8. | முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் (10.09.2011 முதல்) | ➢ ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும .<br><br>➢ 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருத்தல் வேண்டும்<br><br>➢ நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்<br><br>➢ அரசாணை (பல்வகை) எண்.86 ,வருவாய் (நி.சீ. 1(2)) துறை , நாள்:20.02.2014-ன் படி அனைத்து முதியோர் ஓய்வூதியத்திட்டங்கள் மற்றும் முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் இருந்து இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத்திட்டங்களை 01.04.2014 முதல் நிலச்சீருத்தத்துறை ஆணையரிடமிருந்து வருவாய் நிர்வாக ஆணையருக்கு நிர்வாக கட்டுப்பாட்டினை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |

அரசு கடித எண்.25 சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்ட துறை , நாள்:17.04.2015-ன் படி "ஆதரவற்ற " என்பதற்கான திருத்தம் கீழ்கண்டவாறு

மெட்ராஸ் முதியோர் ஓய்வூதிய விதிகள் 1962 -ன் துணை விதி 5-ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தம்

"ஆதரவற்றோர் " என்பவர்

அ) எவ்வித வருமானம் அல்லது வருமானத்திற்கான ஆதாரம் இல்லாதவர்.

ஆ) எவ்வித வருமானம் அல்லது வருமானத்திற்கான ஆதாரம் இல்லாமலும் மற்றும் நிரந்தர சொத்து மதிப்பு ரூ.50,000/- க்கு குறைவானதாகவும் இருக்க வேண்டும். கீழ்க்காணும் இனங்களில் 20 வயதிற்கு மேற்பட்ட உறவினர்கள் எவரும் இல்லாமல் இருக்க வேண்டும்

1. மகன்
2. மகனது மகன் மற்றும்

3. கணவன்/மனைவி மற்றும் இதர உறவினர்கள் சாதரணமாக ஒன்றாக வசிப்பவர்களாக இருப்பினும் கீழ்காணும் இனங்களில் ஆதரவற்றவராக கருதப்படுவர்

a) மேற்காணும் இனங்களில் உள்ள உறவினர்கள் அனைவரும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என்பது ஒப்பளிப்பு அளிக்கும் அலுவலருக்கு திருப்தி ஏற்படும் வகையில் இருக்க வேண்டும்.

b)உறவினர் தொடர்ந்து காணாமல் இருத்தல், தகுந்த முறையில் விசாரணைக்கு பின்னர் ஒப்பளிப்பு அலுவலருக்கு திருப்தி ஏற்படும் வகையிலும் இருப்பின் அவர் ஆதரவற்றவராக கருதப்படுவர்.

மாற்றப்பட்ட ஆதரவற்றோருக்கான வரையரையில் மூன்று மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன். முக்கிய மாற்றம் உறவினர் என்பது மேல் சொல்லப்பட்ட உறவினர்கள் சாதாரணமாக ஒன்றாக வசிப்பவர்கள் என்பதாகும். இரண்டாவது மாற்றம் குடும்பம் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பமாக இருத்தல் வேண்டும். உறவினர்களுடன் வசிக்கும் போது அக்குடும்பம் வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் தகுதிகளை தளர்த்தும் பொருட்டு பயனாளிகளின் அசையா சொத்துகளின் மதிப்பு ரூ.5,000/- லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கீழ்கண்ட திட்டங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவித்தொகை விகிதாசாரம் பின்வருமாறு.

| வ. எண் | திட்டம் | மத்திய அரசின் விகிதாசாரம் | மாநில அரசின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| 1. | இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம் | ரூ.200 (79 வயது வரை)<br>ரூ.500 ( 80 வயது மற்றும் அதற்கு மேல்) | ரூ.800 (79 வயது வரை)<br>ரூ.500 ( 80 வயது மற்றும் அதற்கு மேல்) |
| 2. | இந்திரா காந்தி மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய தேசிய திட்டம் | ரூ.300 | ரூ.700 |
| 3. | இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ரூ.300 | ரூ.700 |

NASP - National Social Assistance Programme, PFMS- Public Finance Management System மூலம் தமிழக அரசிற்கு நிதியுதவி மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட ஓய்வூதிய திட்டங்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.500 லிருந்து ரூ.1000/- ஆக உயர்த்தி அரசாணை(நிலை) எண்.41 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.6(1)) துறை, நாள்:17.05.2011-ன் படி மே-2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 01.06.2011 முதல் உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

## ஆதரவற்ற திருநங்கையர்களுக்கான ஓய்வூதியத்திட்டம்

(அரசாணை (நிலை) எண்.235 சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டம் (ச.ந.8) துறை, நாள்:02.08.2012 )

அரவாணிகள் நல வாரியம் (அரசாணை (நிலை) எண்.38 சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டம் (ச.ந.8) துறை, நாள்:15.04.2008)

## தகுதி மற்றும் நிபந்தனைகள்

- 40 வயதிற்கு மேற்ப்பட்ட திருநங்கையாக இருத்தல் வேண்டும்.
- உடல்ரீதியாக உழைத்து சம்பாதிக்க இயலாத நிலை.
- குடும்ப உறுப்பினர்களோ அல்லது வேறு எந்த நபர்களாளோ உதவி பெற கூடாது.
- அரவாணிகள் நல வாரிய அடையாள அட்டை , மருத்துவ குழுவினரால் வழங்கப்பட்ட வயது சான்று மற்றும் குடும்ப அட்டை அல்லது இருப்பிடச்சான்று வைத்திருக்க வேண்டும்.

## சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர்களுக்கு பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை பட்டியல் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு சம்பளம் பட்டியல் ஏற்பளிக்கும் அதிகாரம்

அரசாணை (நிலை) எண்.403, வருவாய் (நி.சீ.1(2)) துறை, நாள்:26.08.2010-ன் படி அரசின் நலத்திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவி தொகைகளை பயனாளிகளுக்கு வழங்க பட்டியலை ஏற்பளிக்கும் அதிகாரத்தை வருவாய் வட்டாட்சியர்களிடமிருந்து வட்டந்தோறும் சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.600, வருவாய் (நி.சீ.1(2)) துறை, நாள்:18.11.2010-ன் படி பணியாளர்கள் சம்மந்தப்பட்ட ஊதியம் உள்ளிட்ட இதர பட்டியல்களை ஏற்பளிக்கும் மற்றும் காசாக்கும் அதிகாரத்தை வருவாய் வட்டாட்சியர்களிடமிருந்து வட்டந்தோறும் சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

## சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதிய திட்டம்

அரசாணை (பல்வகை) எண்:121, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை , நாள்:14.09.1986-ன் படி தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றத்தில் பதிவு செய்துள்ள சித்தா மருத்துவம் செய்துவரும் வயது முதிர்ந்த 60 வயத்திற்கு மேற்பட்ட வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள பரம்பரை சித்த வைத்தியர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ.150/- வழங்கி ஆணையிடப்பட்டது.

## ஆயர்வேதா , யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கு ஓய்வூதிய திட்டம்

அரசாணை எண்.41 சுகாதாரம் மற்றும் குடும்பநலம் (இ.ம.2(2)) துறை , நாள்:16.02.2010-ன் படி இந்திய மருத்துவ முறைகளில் உள்ள ஆயர்வேதா , யுனானி மற்றும் ஓமியோபதி ஆகியவைகளை பரம்பரை பரம்பரையாக மருத்துவம் செய்துவரும் வயது முதிர்ந்த 60 வயதிற்கு மேற்பட்ட பதிவு செய்துள்ள பரம்பரை வைத்தியர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.500/- வழங்கி ஆணையிடப்பட்டது.

அரசாணை(நிலை) எண்.352 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (இ.ம.2(2)) துறை , நாள்:27.12.2011-ன் படி பரம்பரை சித்தா , ஆயர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத்தொகையினை ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தியும், ஆண்டுவருமானம் ரூ.24,000/- என நிர்ணயம் செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

# முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம்

அரசாணை (நிலை) எண்.265 வருவாய் (நி.சீ.1(2)) துறை, நாள்:10.09.2011 -படி நடைமுறைப்படுத்தப்பட்டது.

## தகுதிகள்:

- 2.50 ஏக்கருக்கு மேற்படாத நஞ்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புஞ்செய் நிலத்தினை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்நிலத்தில் நேரடியாக பயிர்செய்யும் 18 முதல் 65 வயது வரை அனைத்த குறு மற்றும் சிறு விவசாயிகள் .
- விவசாயம் மற்றம் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுப்பட்டுள்ள 18 முதல் 65 வயது வரை உள்ள அனைத்து தொழிலாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள்.
- மேற்கண்ட இரண்டு வகைகளை சேர்ந்தவர்கள் மூல உறுப்பினராக பதிவு பெற தகுதியுடைவர்கள். மேலும் அவர்களை சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவு செய்ய தகுதியானவர்கள்.

சார்ந்து வாழ்பவர் என்பது பொருள் ஈட்டாத கீழ்கண்ட உறவினர்கள் விபரம் பின்வருமாறு

- மனைவி அல்லது கணவன்( நேற்விற்கேற்ப)
- குழந்தைகள்
- இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள்
- பெற்றோர்

இத்திட்டத்தில் கீழ்கண்ட பணிகள் விவசாயம் சார்ந்த தொழில்கள் என கருதப்படும்.

1. தோட்டக்கலை
2. பட்டுப்புழு வளர்ப்பு
3. பயிர் வளர்த்தல் , புல் வளர்த்தல் அல்லது தோட்ட விளைபொருள்
4. பால்பண்ணை தொழில்
5. கோழிப்பண்ணை
6. கால்நடை வளர்ப்பு
7. உள்ளூர் மீன்பிடி தொழிலில் ஈடுபடுதல்

8. மரங்களை வளர்த்தல்
9. ஒரு குடியானவர் தமது நிலத்தில் முழுவதையோ அல்லது ஒரு பகுதியோ மேய்ச்சலுக்காக பயன்படுத்துதல்
10. உரவகைகளான பயர்களை வளர்க்கும் நோக்கத்திற்காக நிலத்தினை பயன்படுத்துதல்

திட்ட அடையாள அட்டைகள் விபரம்

- ஒரு குடும்பத்தில் விவசாய தொழில் ஈடுபடும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் பண்பேறிய சிவப்பு வண்ணம் (Maroon Colour) பிற குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிறத்திலும் (Gray Colour) கணவன் அல்லது மனைவி விவசாய தொழிலில் ஈடுபடாதபட்சத்தில் சாம்பல் நிறத்திலும் அடையாள அட்டை வழங்கப்படும்.

## திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகள்

### அ.கல்விக்கான உதவி

1) இத்திட்டத்தின்கீழ் பதிவுபெற்ற உறுப்பினர் ஒருவரின் குழந்தைகளின் கல்விக்காக வழங்கப்படும் உதவித்தொகை விபரங்கள் பின்வருமாறு.

| வ.எண் | கல்வி விபரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | தொழிற்பயிற்சி நிறுவனம்(ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (Polytechnic) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2. | கவன்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | இளங்கலை பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப்பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 4. | முதுகலை பட்டப்படிப்பு (Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |
| 5. | சட்டம் , பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6. | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) ()ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

### ஆ.திருமண உதவி (உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களை சார்ந்தவர்கள்)

- இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவாகி இருக்க வேண்டும்.
- திருமணத்திற்கான சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும்.
- ஒரு உறுப்பினருக்கு ஒரு திருமணத்திற்கு மட்டுமே திருமணம் உதவித்தொகை அனுமதிக்கப்படும்.
- சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திருமண உதவி திட்டங்களில் உதவித்தொகை பெற தகுதியற்றவர்கள் இந்த திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
- இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யும் நபர்களுக்கு முறையே ஆணுக்கு ரூ.8,000/- , பெண்ணுக்கு ரூ.10,000/- எனவும் திருமண உதவித்தொகை வழங்கப்படும்.

### இ.விபத்து நிவாரணம் மற்றும் காயங்கள் (உறுப்பினர்களுக்கு மட்டும்)

மரூன் அட்டை பெறத் தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் விபத்துக்குள்ளாக நேரிடும்பொழுது கீழ்க்குறிப்பிட்டவாறு உதவித்தொகை வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **a)** | இறப்பு | ரூ.1,00,000/- |
| **b)** | முடியாத அளவிற்கு இழப்பு<br>அ) இரண்டு கைகள் அல்லது<br>ஆ) இரண்டு கால்கள் அல்லது<br>இ)ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது<br>ஈ)மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல் | ரூ.1,00,000/- |
| **c)** | முடியாத அளவிற்கு இழப்பு<br>அ) ஒரு கை அல்லது<br>ஆ)ஒரு கால் அல்லது<br>இ)பக்கவாதம் | ரூ.50,000/- |
| **d)** | மேலே (a) மற்றும் (b) இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல் | ரூ.50,000/- |

## ஈ)இயற்கை மரண உதவித்தொகை (உறுப்பினர்களுக்கு மட்டும்)

மெரூன் நிற அட்டை பெற தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் இயற்கையாக மரணமடைந்தால் ரூ.10,000/- அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும்.

அரசாணை(நிலை) எண். 133, வருவாய் (நி.சீ1(2)) துறை , நாள்: 24.04.2017-ன் படி ரூ.10,000 லிருந்து ரூ.20,000/- ( 24.04.2017 முதல் ) ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

## ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை (உறுப்பினர்களுக்கு மட்டும்)

எந்தவொரு பதிவு பெற்ற உறுப்பினர் இறந்தாலும் ஈமச்சடங்கிற்கான நிதியுதவி ரூ.2,000/- வழங்கப்படும்.

## அரசாணை(நிலை) எண்.333 வருவாய் (நி.சீ.1(2)) துறை, நாள்:05.08.2014

## உதவித்தொகை மனுக்கள் அளிப்பதற்கான காலவரம்பு

| வ.எண் | உதவித்திட்டம் | காலவரம்பு |
|---|---|---|
| 1. | கல்வி உதவித்தொகை | கல்வி ஆண்டு தொடங்கியதிலிருந்து 6 மாதத்திற்குள் |
| 2. | திருமண உதவித்தொகை | திருமண தேதிக்கு முன்னர் 3 மாதத்திற்குள் அல்லது திருமண தேதிக்கு பின்னர் 6 மாதத்திற்குள் |
| 3. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை | இறந்த தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் |
| 4. | விபத்து மரணம் , காயம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை | சம்பவ நடைபெற்ற தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் |

## காலதாமத விண்ணப்பங்களுக்கான காலவரம்பு மற்றும் ஒப்பளிப்பு அலுவலர் விபரம்

| வ.எண் | அலுவலர் விபரம் | காலதாமத்திற்கான காலவரம்பு |
|---|---|---|
| 1. | வருவாய் கோட்ட அலுவலர் | 3 மாதங்கள் (6 மாதத்திற்கு மேல் 9 மாதத்திற்குள்) |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர் | 6 மாதங்கள் (9 மாதத்திற்கு மேல் 12 மாதத்திற்குள்) |
| 3. | மாவட்ட ஆட்சியர் | 12 மாதங்கள் (12 மாதத்திற்கு மேல் 18 மாதத்திற்குள்) |

## தற்காலிக இயலாமைக்கான (Temprorary Incapacitation) மாதாந்திர உதவித்தொகை

அரசாணை (பல்வகை) எண்.285 , வருவாய் (நி.சீ.1(2))துறை, நாள்:06.08.2012-ன் படி காசநோய், புற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் போன்ற நோயால் பாதிக்கப்பட்ட தற்காலிக இயலாமை நபர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/- சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

சென்னை நிலச்சீர்த்திருத்த ஆணையர் அவர்களின் கடித எண். ஜெ1/3319/2012(நி.சீ) , நாள்:08.03.2013-ன் படி சிறுநீரக நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு அளிக்கப்படும் டயாலிஸிஸ் சிகிச்சை மற்றும் மாற்று சிறுநீரகம் பொறுத்தப்பட்டவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/- வழங்க நிர்வாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை நிலச்சீர்த்திருத்த ஆணையர் அவர்களின் கடித எண். ஜெ1/3319/2012(நி.சீ) , நாள்:03.07.2013-ன் படி கை கால்களில் ஏற்படும் எழும்பு முறிவு மற்றும் அவையநிலை மாறுதல் , தசைநார், முதுகெழும்பில் ஏற்படும் நிலையான காயங்கள்,

40% மேல் பாதிக்கப்பட்ட மூட்டு மாற்று சிகிச்சை , நரம்பியல் ஒழுங்கின்மை, இதய கோளாறு நோய், கண் பார்வை , சுவாசக் கோளாறு , நுரையீரல் தொடர்புடை நோய்கள், கல்லீரல் கோளாறு போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/- வழங்க நிர்வாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

## தற்காலிக இயலாமைக்கான ஓய்வூதியம் பெறுவதற்கு ஒப்பளிப்பு கால அளவு மருத்துவ சான்று வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மருத்தவர்கள் விபரம்.

| வ.எண் | நோயின் விபரம் | ஒப்பளிப்பு கால அளவு | மருத்துவ சான்று அளிக்கும் மருத்துவர் விபரம் |
|---|---|---|---|
| 1. | காசநோய்<br>1. காசநோய்<br>2. மறு சிகிச்சை<br>3. MDR காசநோய்<br>4. கூடுதல் நுரையீரல் காசநோய் | 6 மாதங்கள்<br>8 மாதங்கள்<br>24 மாதங்கள்<br>26 மாதங்கள் | காசநோய் அரசு மருத்துவ அலுவலர் அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் |
| 2. | எய்ட்ஸ் | ஆயுட்காலம் முழுவதும் | ART மருத்துவ அலுவலர் அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் |
| 3. | புற்று நோய்<br>நிலை - 1 முதல் 4 வரை | நிலை - 1 முதல் 2 வரை-<br>9 மாதங்கள்<br>நிலை - 3 முதல் 4 வரை-<br>ஆயுட்காலம் முழுவதும் | அரசு மருத்துவ கல்லூரியின் புற்றுநோய் பிரிவு அல்லது மாவட்ட மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலர் அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| 4. | சிக்கிள் செல் அனீமியா | ஆயுட்காலம்<br>முழுவதும் | சிகிச்சை அளிக்கும்<br>மருத்துவ அலுவலர் (அரசு<br>மருத்துவமணை/<br>ஆரம்ப சுகாதார நிலையம்) |
| 5. | தாலசீமியா | ஆயுட்காலம்<br>முழுவதும் | சிகிச்சை அளிக்கும்<br>மருத்துவ அலுவலர் (அரசு<br>மருத்துவமணை/<br>ஆரம்ப சுகாதார நிலையம்) |
| 6. | ஹிமோபிலியா | ஆயுட்காலம்<br>முழுவதும் | சிகிச்சை அளிக்கும்<br>மருத்துவ அலுவலர் (அரசு<br>மருத்துவமணை/<br>ஆரம்ப சுகாதார நிலையம்) |
| 7. | டயாலிஸிஸ் சிகிச்சை | 6 மாதங்கள்<br>(நேர்வுக்கேற்ப கால<br>நீடிப்பு செய்து<br>கொள்ளலாம்.) | முதுநிலை குடிமை<br>மருத்துவர் /மருத்துவ<br>அலுவலர், ஆரம்ப சுகாதார<br>நிலையம் |
| 8. | சிறுநீரக மாற்று அறுவை<br>சிகிச்சை | 1 வருடம்<br>(நேர்வுக்கேற்ப கால<br>நீடிப்பு செய்து<br>கொள்ளலாம்.) | முதுநிலை குடிமை<br>மருத்துவர் /மருத்துவ<br>அலுவலர், ஆரம்ப சுகாதார<br>நிலையம் |
| 9. | மேல் மற்றும் கீழ்<br>மூட்டுகளில் முறிவு<br>மற்றும் அவையநிலை<br>மாறுதல் | 3 முதல் 6<br>மாதங்கள் | எலும்பு முறிவு மருத்துவ<br>அலுவலர்( குடிமை<br>மருத்துவர் அலுவலர்<br>நிலைக்கு குறையாது) |
| 10. | கை மற்றம் கால்களில்<br>முறிவு மற்றும்<br>அவையநிலை மாறுதல் | 3 மாதங்கள் | எலும்பு முறிவு மருத்துவ<br>அலுவலர்( குடிமை<br>மருத்துவர் அலுவலர்<br>நிலைக்கு குறையாது) |
| 11. | தசைநார் காயங்கள் | 3 மாதங்கள் | எலும்பு முறிவு மருத்துவ<br>அலுவலர்( குடிமை<br>மருத்துவர் அலுவலர்<br>நிலைக்கு குறையாது) |

| | | | |
|---|---|---|---|
| 12. | தசைநாண் காயங்கள் | 3 முதல் 6 மாதங்கள் | எலும்பு முறிவு மருத்துவ அலுவலர்( குடிமை மருத்துவர் அலுவலர் நிலைக்கு குறையாது) |
| 13. | கை காயங்கள் | 3 முதல் 6 மாதங்கள | எலும்பு முறிவு மருத்துவ அலுவலர்( குடிமை மருத்துவர் அலுவலர் நிலைக்கு குறையாது) |
| 14. | எலும்பு மற்றம் இணைப்பு தொற்று | 3 முதல் 12 மாதங்கள் | எலும்பு முறிவு மருத்துவ அலுவலர்( குடிமை மருத்துவர் அலுவலர் நிலைக்கு குறையாது) |
| 15. | தீங்கற்ற எலும்பு கட்டிகள் | 3 முதல் 6 மாதங்கள | எலும்பு முறிவு மருத்துவ அலுவலர்( குடிமை மருத்துவர் அலுவலர் நிலைக்கு குறையாது) |
| 16. | தீங்கு விளைவிக்கும் எலும்பு கட்டிகள் | ஆயுட்காலம் முழுவதும் | எலும்பு முறிவு முருத்துவர் /புற்றுநோய் மருத்துவ அலுவலர் |
| 17. | முதுகெழும்பு காயம் (நரம்பியல் காயல் இல்லாமலோ அல்லது முதுகெழும்பில் பகுதி காயம் ) | 3 -9 மாதங்கள் | எலும்பு முறிவு முருத்துவர்/நரம்பியல் மருத்துவர் |
| 18. | தண்டுவட காயங்கள் | ஆயுட்காலம் முழுவதும் | எலும்பு முறிவு முருத்துவர்/நரம்பியல் மருத்துவர் |
| 19. | முடக்குவாதம் அல்லது அழற்சி கீழ்வாதம் (40% மேல் உள்ள நிரந்தர ஊனம்) | 3 மாதங்கள் முதல் ஆயுட்காலம் முழுவதும் | எலும்பு முறிவு முருத்துவர் |
| 20 | நரம்பியல் ஒழுங்கின்மை (இரத்த கசிவு, பார்க்கின்சன் நோய், தண்டுவட பாதிப்பு ) | 1 வருடம் | எலும்பு முறிவு முருத்துவர்/நரம்பியல் மருத்துவர் |

| | | | |
|---|---|---|---|
| 21 | தசை கூட்டு ஒழுங்கின்மை | 3 மாதங்கள் | எலும்பு முறிவு முருத்துவர்/நரம்பியல் மருத்துவர் |
| 22 | இதய கோளாறுகள் நிலை 3 மற்றும் 4 | 3 மாதங்கள் | இதய நோய் நிபுணர் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி |
| 23 | கண் பார்வை இழத்தல் | 3 மாதங்கள் | கண் சிகிச்சை நிபுணர் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி |
| 24 | நாள்பட்ட சுவாச பிரச்சனைகள் | 3 முதல் 6 மாதங்கள் | நுரையீரல் சிகிச்சை நிபுணர் /பொது மருத்துவர் அரசு மருத்துவமனை |
| 25 | கல்லீரல் பிரச்சனைகள் | 3 மாதங்கள் | கல்லீரல் சிகிச்சை நிபுணர்/இறப்பை குடல் நிபுணர் அரசு மருத்துவ கல்லூர்/முதுநிலை குடிமை மருத்துவர், அரசு மருத்துவமனை |
| 26. | கல்லீரல் புண்கள் | 3 மாதங்கள் | கல்லீரல் சிகிச்சை நிபுணர்/இறப்பை குடல் நிபுணர் அரசு மருத்துவ கல்லூர்/முதுநிலை குடிமை மருத்துவர், அரசு மருத்துவமனை |
| 27. | கல்லீரல் செயல் இழப்பு | 3 முதல் 6 மாதங்கள் | கல்லீரல் சிகிச்சை நிபுணர்/இறப்பை குடல் நிபுணர் அரசு மருத்துவ கல்லூர்/முதுநிலை குடிமை மருத்துவர், அரசு மருத்துவமனை |
| 28. | நாள்பட்ட சீறுநீரக நோய்கள் | 6 மாதங்கள் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் சிறுநீரக துறையின் உதவி |

| | | | |
|---|---|---|---|
| | | | பேராசிரியர் /இணை பேராசிரியர் மற்றும் பேராசிரியர் |
| 29. | கடுமையான சீறுநீரக காயங்கள் | 2 மாதங்கள் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் சிறுநீரக துறையின் உதவி பேராசிரியர் /இணை பேராசிரியர் மற்றும் பேராசிரியர் |
| 30. | கடுமையான மனநோய் | 3 மாதங்கள் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 31. | மன கோளாறு | 1 வருடம் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 32. | நாள்பட்ட கடுமையான மன கோளாறு | ஆயுட்காலம் முழுவதும் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 33. | மனஅழுத்த ஒழுங்கின்மை | 1 வருடம் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 34. | மனநிலை ஒழுங்கின்மை | 6 மாதங்கள் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 35. | மது போதைக்காளானவர்கள் | 6 மாதங்கள் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 36. | மன நோய் | 1 வருடம் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |
| 37. | இருமுனை மனகோளாறு | 1 வருடம் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |

| | | | |
|---|---|---|---|
| 38. | கரிம மன கோளாறுகள் | ஆயுட்காலம் முழுவதும் | அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் |

## அனாதை குழந்தைகளுக்கு மாதாந்திர உதவித்தொகை (Grant to Orphan)

அரசாணை (பல்வகை) எண்.76 , வருவாய் (நி.சீ.1(2))துறை, நாள்:12.03.2013-ன் படி எய்ட்ஸ் நோயால் பெற்றோர்களை இழந்த அனாதைகைளுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1,000/- வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.265 வருவாய் துறை , நாள்:10.09.2011-ல் குறிப்பிட்டுள்ளதன்படி சார்ந்திருக்கும் கால அளவு வரை மாதாந்திர உதவித்தொகை (**Grant to Orphan)**வழங்கப்படும்.

கூடுதல் தலைமைச் செயலர்/நிலச்சீர்த்திருத்த ஆணையர் அவர்களின் கடித எண். ஜே1/11113/2014 (நி.சீ ) நாள்: 30.10.2018 -ல் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மனுக்களை பரிசீலனை செய்யும்போது கீழ்கண்ட காரணங்களுக்காக தள்ளுபடி செய்யலாம் என தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

### 1. உறுப்பினர் பதிவு செய்தல்

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- உச்ச வரம்பிற்குமேல் சொந்தமான நிலங்கள் வைத்திருத்தல்
- நேரடியாக சாகுபடி செய்யாமலிருப்பது.
- மத்திய/மாநில /தனியார் துறைகளில் பணிபுரிவது.
- விவசாய தொழிலாளர்களாக இல்லாதிருப்பது.
- இதர காரணங்கள்.

### 2. உறுப்பினர் சார்ந்தோர் பதிவு செய்தல்

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- மத்திய/மாநில /தனியார் துறைகளில் பணிபுரிவது.
- இதர காரணங்கள்.

### 3. கல்வி உதவித்தொகை

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- உறுப்பினர் முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- இதர காரணங்கள்

### 4. திருமண உதவித்தொகை

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- உறுப்பினர் முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- திருமணம் நடைபெறாமல் இருப்பவர்கள்
- சமூக நலத்துறையின் மூலம் உதவித்தொகை பெற்றோர்
- இதர காரணங்கள்

### 5. இயற்கை மரண உதவித்தொகை

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- உறுப்பினர் முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- இதர காரணங்கள்

### 6. விபத்து நிவாரணம் மற்றும் காயங்கள்

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- உறுப்பினர் முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- இதர காரணங்கள்

### 7. தற்காலிக இயலாமை

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- உறுப்பினர் முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- இந்த திட்டத்தின் கீழ் கவரப்படாத நோய்கள்
- இதர காரணங்கள்

## 8. அனாதை குழந்தைகளுக்கான நிதி உதவித்தொகை

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- பெற்றோர் முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- இதர காரணங்கள்

## 9. ஈமச்சடங்கு உதவித்தொகை

- குறிப்பிட்ட முகவரியில் வசிக்காதது
- ஏற்கனவே பயனடைந்தோர்/ இரண்டாம் மனு
- முதியோர் ஓய்வூதியம் பெறுதல்
- ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் உதவித்தொகை பெற்றிருத்தல்
- இதர காரணங்கள்

## விபத்து நிவாரணத்திட்டம் (Accident Relief Scheme)

அரசாணை (நிலை) எண். 471 , நிதி (மு.பொ.நி.நி.) துறை , நாள்: 23.05.1989-ன் படி கீழ்கண்ட 43 வகை ஏழை தொழிலாளர்களின் குடும்பத்திற்காக தனிநபர் ஒருங்கணைந்த விபத்து நிவாரண திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அரசாணை (நிலை) எண். 442 , வருவாய் (பே.மே.1(1)) துறை , நாள்: 30.12.2015-ன் படி ஏழ்மை நிலையில் உள்ள குடும்ப தலைவர் விபத்தின் காரணமாக இறந்தால் ரூ.20,000 (30.12.2015 முதல்) நிதி உதவியாக அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இந்த உதவித்தொகை முழுவதும் மத்திய அரசால் (NFBS-National Family Benefits Scheme) தேசிய குடும்ப நலத்திட்டம் மூலம் வழங்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண். 471 , நிதித்துறை , நாள்:23.05.1989 -ல் குறிப்பிடப்பட்டுள்ள 43 வகை தொழிலாளர்களின் ஏழை வாரிசுதாரர்கள்.

1. Dhobies
2. Cobblers
3. Carpenters, Cart -builders
4. Drivers of animal drawn vehicles
5. Blacksmiths, Hammer smiths
6. Goldsmiths, Silversmiths
7. Basket weavers
8. Stone - cutters stone Carvers
9. Tile workers
10. Brick layers
11. Well diggers
12. Well constructors
13. Agricultural labourers, small and marginal farmers (with the holding of less than 2.5 acres)
14. Neera Tappers
15. Sewerage workers
16. Pesticide sprayers
17. Palmyrah / coconut tree climbers

18. Fishermen (not member of Co.op Society)
19. Building and construction workers
20. Truck drivers
21. Autorickshaw drivers
22. Drivers of private cars, Taxis and Buses
23. Barbers
24. Cart Pullers
25. Cycle Rickshaw drivers
26. Handloom weavers in the private sectors
27. Mudpot makers and mud toy makers (Kuyavan, Kulalars, Vellalar)
28. House servants working in houses
29. Snake catcher whose regular profession is snake catching
30. All workers in the cinema industry excepting cinema actor / actress
31. Loading and unloading workers of lorries
32. White washers, painters and electricians
33. All brick workers who are employed on daily wages and are injured / death due to accident
34. Tailors who are injured or met with accident or met with death due to accident.
35. Poor Occupational category of Gramiya Nadanam and Naiyandi Mela Artists.
36. Poor Occupational category of cooks engaged in the marriage and other functions.
37. Occupational category of workers engaged in the flour mills unregistered under the factories Act 1948
38. Occupational category of conductors engaged in the private buses.
39. Category of workers involved in the work of errection of pandal, stage, mandapam work connected for the conduct of any conference putting up decorative arches and pandals for celebration of marriage and the like and workers connected with provision of light and sound.
40. Persons engaged in the collection of honey, gall nut, etc,. of hill and forest products (other than the members of co-op society)

41. Category of persons engaged as full time plumbers
42. Category of Person engaged as full time cleaners in private cars / lorry truck and van drivers of private van (who do not own vehicle)
43. Full time employers of match workers and Fire works industries (Govt, Lr.No. 40773/S1/93-6 Revenue Department , dt.4.2.74)

## நலிந்தோர் நலத்திட்டம் (Distress Relief Scheme)

அரசாணை (நிலை) எண். 470 , நிதி (மு.பொ.நி.நி.) துறை , நாள்: 23.05.1989-ன் படி வறுமையில் வாழும் ஏழை குடும்பத்தில் உழைத்து பொருள் ஈட்டும் நபர்(ஆண் அல்லது பெண்) இறந்துபோனால் அந்த குடும்பத்திற்கு உதவும்வகையில் நலிந்தோர் குடும்ப நல உதவித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது

அரசாணை (நிலை) எண். 443 , வருவாய் (பே.மே.1(1)) துறை , நாள்: 30.12.2015-ன் படி ஏழ்மை நிலையில் உள்ள குடும்ப தலைவர் விபத்தின் காரணமாக இறந்தால் ரூ.20,000 (30.12.2015 முதல் ) நிதி உதவியாக அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இந்த உதவித்தொகை முழுவதும் மத்திய அரசால் (NFBS-National Family Benefits Scheme) தேசிய குடும்ப நலத்திட்டம் மூலம் வழங்கப்படுகிறது.

### நிபந்தனைகள்

- இயற்கையான மரணமாக இருக்க வேண்டும். விபத்து , தற்கொலை கொண்டவர் குடும்பம் இந்த உதவியைக் கோர முடியாது.
- மரணமடைந்தவர் குடும்பத் தலைவராக , அவர் மட்டுமே குடும்பத்தில் வருமானம் தேடித் தரும் நபராக இருந்திருக்க வேண்டும்.
- மரணமடைந்தவரின் வயது 60-க்குள் இருக்க வேண்டும்.
- குடும்பத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகள் இருக்கக் கூடாது. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பிள்ளை சம்பாதிக்க முடியாத நிலையில் (உடல் ஊனமுற்றவர் அல்லது படித்துக் கொண்டிருப்பவராக இருத்தல்) இருந்தால் இவ்வுதவியைப் பெற இயலும்.
- விவசாயத் தொழில் செய்து வருபவர்களாக இருந்தால் 2.5 ஏக்கர் பாசன நிலம் வைத்திருப்பவர்கள் அல்லது 5 ஏக்கர் பாசனமில்லா நிலமுடைய விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறமுடியும்.
- சாதி, மதம் போன்ற பிற கட்டுப்பாடுகள் இல்லை.

# முதலமைச்சர் பொது நிவாரண நிதி

## (Chief Minister Public Relief Fund)

அரசாணை (நிலை) எண்.89 வருவாய்(பே.மே.1(1)) துறை, நாள்:18.02.2015-ன் படி மேற்கண்ட அரசாணை வெளியிடப்பட்ட நாளான 18.02.2015 மற்றும் அதற்கு பின்னர் நடைபெற்ற கீழ்கண்ட நிகழ்வுகளுக்கு பொது நிவாரண நிதி ரூ.50,000/- மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.48,000/- என நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

- இறப்பு (இயற்கை இடர்பாடுகள், வகுப்பு வாத மோதல்கள், வெடிபொருள் விபத்து, வெடிகுண்டு விபத்து , கொள்ளை சம்பவங்கள், வனவிலங்குகளால் தாக்கப்படுதல்)
- உயர்அறுவைசிகிச்சைகள் மற்றும் இதர மருத்துவ சிகிச்சைகள்
- தொழிற்சாலைகள்/ஆலைகளை மூடப்படுவதால் பாதிப்படையும் ஊழியர்கள்
- பாம்பு கடி , குளம் , குட்டை , ஆறு மற்றும் கடலில் மூழ்கி இறத்தல்
- கட்டிட இடிபாடுகள், வீடுகளில் ஏற்படும் தீ விபத்து மற்றும் அதனால் ஏற்படும் மூச்சு திணறலால் இறத்தல்.

அரசாணை (நிலை) எண்.268 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பே.மே.1(1) துறை, நாள்:18.08.2017-ன் படி பொது நிவாரண நிதி ரூ.50,000/- லிருந்து ரூ.1,00,000/- (18.08.2017 முதல்) ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண். வரு.தணி.5(2)/38345/2019 , நாள்:15.10.2019-ல் முதலமைச்சர் பொது நிவாரண நிதி கோரி அனுப்பப்படும் முன்மொழிவுகள் தொடர்பாக கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

- ஏரி, ஆறு , குளம் மற்றும் கடல் போன்ற நீர்நிலைகளில் மூழ்கி இறத்தல்
- பாம்புகடித்து இறத்தல்
- கட்டிட இடிபாடுகளில் சிக்கி இறத்தல் மற்றும் வீடுகளில் ஏற்படும் தீ விபத்துகளில் சிக்கி இறத்தல்

மேற்கண்ட நிகழ்வுகளுக்கு மட்டும் அரசிற்கு வருவாய் நிர்வாக ஆணையர் மூலம் முன்மொழிவுகள் அனுப்ப வேண்டும்.

சாலை விபத்துகளில் இறத்தல், இயற்கை மரணம் , பிரசவத்தின்போது இறத்தல் , கொலை , தற்கொலை அறுவைச்சிகிச்சை மற்றும் இதர மருத்துவ செலவுகள் , உயர்கல்வி தொடர்வது மற்றும் குடும்ப வறுமை சூழ்நிலை காரணமாக பிள்ளைகளை பராமரித்தல் ஆகிய காரணங்களுக்கான நிவாரணத் நிதி வழங்க பரிந்துரை செய்து கருத்துருக்கள் வருவாய் நிருவாக ஆணையரக்கதிற்கு அனுப்புதல் கூடாது.

மேற்கண்ட நிகழ்வுகளில் அரசின் நடைமுறையில் உள்ள திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்க வழிவகை இல்லையென்றால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறிப்பான பரிந்துரையுடன் நேரிடையாக அரசின் சம்மந்தப்பட்ட துறைக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பிவைக்கலாம்.

அரசு கடித எண். 8688/பே.மே.1(1)/2018-1 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை , நாள்:22.05.2018-ல் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து காலங்கடந்து நிதியுதவி வழங்ககோரும் கருத்துருக்களை தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழிவுகளில் இறந்தவரின் பெயர் , இறப்பிற்கான காரணம் , மனுதாரர் தொழில் , அவரது வருமானம் போன்ற விபரங்கள் இறப்பு சான்று மற்றும் முதல் தகவல் அறிக்கை போன்ற அனைத்து ஆவணங்களிலும் வட்டாட்சியர் /கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கைகளில் மேற்படி விபரங்கள் மாறுபடாமல் இருத்தல் வேண்டும்.

வருமானச்சான்று மனுதாரரின் பெயரில் இணையவழியில் மட்டுமே வழங்கப்பட வேண்டும் எனவும் , வருமானச்சான்று காலக்கெடு முடிவுடையாத நிலையில் இருத்தல் வேண்டும். மேலும் வாரிச்சான்று இணையவழியில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க கோரி முன்மொழிவுகள் அனுப்பப்படும்முன்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்பேரில் நிவாரணம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதா அல்லது உரிய அரசாணை ஏற்கனவே வெளிடப்பட்டள்ளதா என்பதை சரிபார்த்த பின்னரே முன்மொழிவுகள் அனுப்பப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவில் குறிப்பான பரிந்துரை மற்றும் விரிவான அறிக்கையுடன் கீழ்கண்ட இணைப்பு I படிவத்தில் பூர்த்தி செய்தும், இணைப்பு II-ல் உள்ளவாறு ஆவணங்களின் அசல் மற்றம் நகல்கள் (சான்றுகளுடன்) இரட்டை பிரதிகளில் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## இணைப்பு-I

மாவட்ட ஆட்சியரின் அறிக்கை கீழ்க்காணும் படிவத்திலான விவரங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | |
| 2. | வட்டத்தின் பெயர் | |
| 3. | கிராமம் | |
| 4. | இறந்தவரின் பெயர் மற்றும் வயது | |
| 5. | இறப்பிற்கான காரணம் | |
| 6. | இறந்த தேதி | |
| 7. | மனுதாரர் பெயர் மற்றும் உறவுமுறை | |
| 8. | இறந்தவரின் வாரிசுதாரர்கள் விவரம் | |
| 9. | வாக்கு மூலம் | |
| 10. | முதல் தகவல் அறிக்கை விவரம் | |
| 11. | பிண ஆய்வு அறிக்கை விவரம் | |
| 12. | இறந்தவர் பொருளீட்டும் நபரா (ஆம்/இல்லை) | |
| 13. | இறந்தவரின் குடும் ஆண்டு வருமானம் | |
| 14. | அரசு நிவாரணம் ஏதும் வழங்கப்பட்டுள்ளதா (ஆம் / இல்லை) | |
| 15. | நீதி மன்றத்தில் வழக்கு ஏதேனும் | |

| | | |
|---|---|---|
| | நிலுவையில் உள்ளதா (ஆம்/இல்லை) | |
| 16. | குடும்ப அட்டை / ஆதார் விவரம் இணைக்கப்பட்டுள்ளதா (ஆம் / இல்லை) | |
| 17. | இந்நேர்வு 4 ஆண்டுகளுக்கு உட்பட்டதா (ஆம் / இல்லை) | |

## இணைப்பு 2

**அசலாக அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள்**

1) இறப்புச் சான்று

2) வாரிசுச் சான்று

3) வருமானச் சான்று

4) தனியரின் மனு

5) தனியரின் வாக்குமூலம்

**நகலில் அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள்**

1) முதல் தகவல் அறிக்கை

2) பிண ஆய்வு அறிக்கை

3) குடும்ப அட்டை

**மாவட்ட ஆட்சியரின் அறிக்கையுடன் அனுப்பப்பட வேண்டிய சான்றுகள்**

1) இந்நேர்வு தொடர்பாக வேறு நிவாரணம் ஏதும் வழங்கப்படவில்லை என்பதற்கான சான்று

2) இந்நிகழ்வு தொடர்பாக வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்பதற்கான விவரம்.

3) கிராம நிர்வாக அலுவலர் வாக்குமூலம், வருவாய் ஆய்வாளர் விசாரணை அறிக்கை, வட்டாட்சியர் அறிக்கை மற்றும் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியர் அறிக்கை

## புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயள் காப்பீட்டு திட்டம்

அரசாணை (நிலை) எண்.271, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (பே.மே.1(2) பிரிவு), நாள்:22.02.2021 )-ன் படி இத்திட்டம் தொடங்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.311, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (பே.மே.1(2) பிரிவு), நாள்:26.02.2021 )-ல் இத்திட்டம் தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

### திட்டத்தின் குறிக்கோள்

வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் பொருளீட்டும் குடும்பத்தின்தலைவர் எந்தவொரு காரணத்தினாலும் இறக்க நேரிட்டால் ரூபாய் இரண்டு இலட்சமும், விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் ரூபாய் நான்கு இலட்சமும், விபத்து காரணமாக நிரந்தர ஊனமுற்றோருக்கு ஊனத்தின் தன்மைகேற்ப ரூபாய் ஒன்று அல்லது இரண்டு இலட்சம் வழங்கப்படும்.

மேலும் 15.02.2021 அன்றை தேதியில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்ப பட்டியல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்ட நிறுவனத்தால் தயார் செய்யப்பட்டு காப்பீடு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தில் தகுதியான நபர்கள் ஆவார்கள்.

### காப்பீட்டு காலம்

இத்திட்டத்தின் காலம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 முதல் அடுத்த ஆண்டு பிப்ரவரி 28 வரை செல்லதக்கதாகும்.

### வழங்கப்படும் இழப்பீட்டு தொகை

- எந்தவொரு காரணத்தினாலும் பொருளீட்டும் குடும்ப தலைவர் இறக்க நேரிட்டால் ரூபாய் இரண்டு இலட்சம் இந்திய ஆயட் காப்பீட்டு கழகத்தால் (LIC) வழங்கப்படும். (பிரதான் மந்தரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம்)
- விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் கூடுதலாக ரூபாய் இரண்டு இலட்சம் அல்லது விபத்து காரணமாக நிரந்தர ஊனமுற்றோருக்கு ஊனத்தின் தன்மைகேற்ப ரூபாய் ஒன்று அல்லது இரண்டு இலட்சம் யுனைடெட் இந்தியா

இன்சூரன்ஸ் நிறுவனத்தால் (UIIC) வழங்கப்படும். (பிரதான் மந்திரி சுரக்ஸா பீமா யோஜனா)

- மேலும் காப்பீடு தொகை முழுவதும் தமிழக அரசால் தொடர்புடைய காப்பீடு நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

**வயது வரம்பு**

**ஆயுள் காப்பீடு**

- வயது 18 முதல் 50 ஆண்டுகள் வரை (LIC)

**விபத்து காப்பீடு**

- வயது 51 முதல் 70 ஆண்டுகள் (UIIC)

**காப்பீடு கோரல் நடைமுறை**

இத்திட்டத்தில் காப்பீடு பெற வறுமைகோட்டிற்கு கீழ் பொருளீட்டும் குடும்ப தலைவர் எந்தவொரு காரணத்தினாலும் மரணமடைந்தாலும் மேற்படி இறப்பு நிகழ்ந்த 30 நாட்களுக்குள் தனி வட்டாட்சியருக்கு(ச.பா.தி) தெரிவிக்கப்பட வேண்டும்.

**Compensation Payable under the Scheme:**

| Scheme Component | 18-50 Years Renewable up to the age of 55 Years | | | 51-70 Years | | |
|---|---|---|---|---|---|---|
| | Natural Death | Accidental Death | Permanent Total Disability | Natural Death | Accidental Death | Permanent Total Disability |
| Life Cover (18-50 Years) | 2,00,000 | 2,00,000 | -- | -- | -- | -- |
| Accident Cover (18-70 Years) | -- | 2,00,000 | 2,00,000 or 1,00,000 | -- | 2,00,000 | 2,00,000 or 1,00,000 |
| Total | 2,00,000 | 4,00,000 | 2,00,000 or 1,00,000 | -- | 2,00,000 | 2,00,000 or 1,00,000 |

# பொங்கல் பண்டிகைக்கு விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம்

அரசாணை (நிலை) எண்.23 , வருவாய் (இ.இ.1(2)) நாள்: 20.01.2004 -ன் படி அனைத்து அரசி பெறும் குடும்ப அட்டைதாரர்களும் பொங்கல் பண்டிகைக்கு விலையில்லா வேட்டி /சேலைகள் வழங்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்

www.pongalsareedhoti.tn.gov.in என்ற இணையதளத்தில பயனாளிகளின் பட்டியலை புதுப்பிக்க முதன்மைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் 12.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையில் கீழ்கண்ட அறிவுரைகள் பின்பற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

- அனைத்து அரிசி அட்டை பயனாளிகளின் விபரங்கள் நாளது தேதிவரை புதுப்பிக்கப்பட வேண்டும்.
- வறுமைக் கோட்டு எண்/ஆதார் அட்டை எண்கள் உள்ளீடு செய்யப்பட வேண்டும்.
- பொது /பி.வ./ மி.பி.வ. அல்லது தா.வ./பழங்குடியினர் போன்ற விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
- **இறந்த பயனாளிகளின் பெயர்களை நீக்கம் செய்யப்பட வேண்டும்.**
- **ஆதார் அட்டை எண்கள் கொண்டு இரட்டை பதிவுகள் நீக்கம் செய்யப்பட வேண்டும்.**
- தகுதியின் அடிப்படையில் அனைத்து பயனாளிகளும் சேர்க்கப்பட வேண்டும்.
- **அரசு வேலையில் இருப்பவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் நீக்கம் செய்யப்பட வேண்டும்.**
- பயனாளிகளின் அடையாள எண், பெயர், தகப்பனார் பெயர், முழுமையான முகவரி போன்ற விபரங்கள் சரியான முறையில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- கிராமத்தின் பெயர், நகராட்சி/பஞ்சாயத்து விபரம், வார்டு எண் ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
- நியாய விலைக்கடை எண், குடும்ப அட்டை வகை மற்றும் குடும்ப அட்டை எண் ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
- பயனாளிகளின் ஆண்டு வருமானம் குறிப்பிடப்பட வேண்டும்
- அரசு வேலையில் இருப்பவர்கள் மற்றும் அரசு வேலையில் இல்லாதவர்கள் விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
- அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் அரசுப்பணியில் இல்லாதவர்களின் விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

## சமூக பாதுகாப்புத்திட்டங்கள் தொடர்பான இணையதள விபரங்கள்

<table>
<tr><th>வ.எண்</th><th>இணையதள விபரம்</th><th>பயன்பாடு</th></tr>
<tr><td>1.</td><td>https://oap.tn.gov.in/oap</td><td>சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகள் தொடர்பானவை</td></tr>
<tr><td>2.</td><td>https://oap.tn.gov.in/cmupt</td><td>உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் தொடர்பானவை</td></tr>
<tr><td>3.</td><td>https://www.pongalsareedhoti.tn.gov.in/pdsds/login</td><td>பொங்கல் பண்டிகைக்கு விலையில்லா வேட்டி /சேலைகள் வழங்க தகுதியுடையவர்கள் பட்டியல் பதிவேற்றம் செய்தல்</td></tr>
<tr><td>4.</td><td>https://edistricts.tn.gov.in/revenue_report<br>(e-district portal)</td><td rowspan="2">சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்தல் தொடர்பாவை</td></tr>
<tr><td>5.</td><td>https://tnedistrict.tn.gov.in/tneda/<br>(e-sevai portal)</td></tr>
<tr><td>6.</td><td>https://gdp.tn.gov.in/psppp</td><td>புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இழப்பீடு தொகை வழங்கப்பட்ட விபரங்கள் பதிவேற்றம் செய்தல் தொடர்பானவை.</td></tr>
</table>